Gramin Krishi Mausam Sewa
(கிராமின் கிருஷி மௌஸம் சேவா)

Experimental Block Level Agromet Advisory Bulletin
(A Joint Initiative of IMD & Amrita School of Agricultural Sciences)

• Customized Agromet Advisory Bulletin •
(தனிப்பயனாக்கப்பட்ட வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கைத் தாள்)

Weather Forecast of KINATHUKADAVU Block
(கிணத்துக்கடவு தொகுதி வானிலை முன்னறிவிப்பு)

BLOCK LEVEL

Agro meteorological Advisory Bulletin for the state of Tamil Nadu Bulletin No. 012/2023
For the period 0830 IST, 27th February 2023 to 0830 IST, 03rd March 2023
Issued on Sunday, 26th February 2023

Issued by

India Meteorological Department
and
Amrita School of Agricultural Sciences,
Amrita Vishwa Vidyapeetham, Arasampalyam, Coimbatore Campus.

Gramin Krishi Mausam Sewa
(கிராமின் கிருஷி மௌஸம் சேவா)

Experimental Block Level Agromet Advisory Bulletin
(A Joint Initiative of IMD & Amrita School of Agricultural Sciences)

• Customized Agromet Advisory Bulletin •

(தனிப்பயனாக்கப்பட்ட வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கைத் தாள்)

Date : 26-02-2023

Past recorded weather summary data for the period 22.02.2023 to 26.02.2023 for the block KINATHUKADAVU

(**கிணத்துக்கடவு** தொகுதிக்கான கடந்த 22.02.2023 முதல் 26.02.2023 வரையிலான காலநிலையில் பதிவு செய்யப்பட்ட வானிலை சுருக்கம்)

Parameter / அளவுரு	22.02.2023	23.02.2023	24.02.2023	25.02.2023	26.02.2023
Rainfall (mm) மழைப்பொழிவு (மிமீ)	0.0	0.0	0.0	0.0	0.0
Tmax (°C) அதிகப்படியான வெப்பநிலை (°C)	31.5	31.4	30.5	30.8	31.6
Tmin (°C) குறைந்த அளவு வெப்பநிலை (°C)	18	17.8	17.8	18.3	17.8
RH-I (%) காலை நேர காற்றின் ஈரப்பதம் (%)	50	72	72	67	83
RH-II (%) மாலை நேர காற்றின் ஈரப்பதம் (%)	26	20	22	20	18
Evaporation (mm) ஆவியாதல் (மி.மீ.)	7.5	7.3	7	8	7
Wind Speed (kmph) காற்றின் வேகம் (கி.மீ.)	11	12	11	10	12
Wind Direction (Degree) காற்று இயக்கம் (பட்டம்)	77	70	68	68	68
Cloud Cover (Octa) மேகக்கணி (ஆக்டா)	0	1	4	8	1

Weather Forecast of KINATHUKADAVU Block in COIMBATORE (Tamil Nadu)
Issued on: 26.02.2023 (Valid Till 08:30 IST of the next five days)

தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர், **கிணத்துக்கடவு** தொகுதியின் வானிலை முன்னறிவிப்பு
வெளியிடப்பட்ட நாள் 26.02.2023 (அடுத்த ஐந்து நாட்களில் 8.30 IST வரை செல்லுபடியாகும்)

Parameter / அளவுரு	27.02.2023	28.02.2023	01.03.2023	02.03.2023	03.03.2023
Rainfall (mm) மழைப்பொழிவு (மிமீ)	0.0	0.0	0.5	0.0	0.0
Tmax (°C) அதிகப்படியான வெப்பநிலை (°C)	31.5	30.7	31.2	31.6	32.2
Tmin (°C) குறைந்த அளவு வெப்பநிலை (°C)	15.7	18.0	19.7	19.5	18.4

Parameter / அளவுரு	27.02.2023	28.02.2023	01.03.2023	02.03.2023	03.03.2023
RH-I (%) காலை நேர காற்றின் ஈரப்பதம் (%)	57	74	87	86	70
RH-II (%) மாலை நேர காற்றின் ஈரப்பதம் (%)	15	15	32	32	21
Wind Speed (kmph) காற்றின் வேகம் (கி.மீ.)	15	13	16	17	13
Wind Direction (Degree) காற்று இயக்கம் (பட்டம்)	90	65	72	72	77
Cloud Cover (Octa) மேகக்கணி (ஆக்டா)	0	0	2	6	6

Weather Summary/Alert (வானிலை சுருக்கம் / எச்சரிக்கை)

As per block level forecast issued by the IMD for Kinathukadavu block of Coimbatore district, sky will be very clear. Minimum quantity of 0.5 mm rainfall is expected during this period. Maximum temperature to be around 30.7°C to 32.2°C. Minimum temperature is to be around 15.7°C to 19.7°C. Morning relative humidity is to be around 57 to 87 % and evening relative humidity is to be around 15 to 32 %. Wind speed is to be around 13 to 17 km per hour and the wind direction will be from North East direction.

வரும் நாட்களில், வானம் மேகமூட்டம் இல்லாமல் இருக்கும். இந்த காலகட்டத்தில் மழைப்பொழிவு எதுவும் இருக்காது. அதிகபட்ச வெப்பநிலை 30.7°C முதல் 32.2°C வரையிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 15.7°C முதல் 19.7°C வரையிலும் இருக்கும். காலை நேர ஈரப்பதம் சுமார் 57 முதல் 87% வரையிலும் மாலை நேர ஈரப்பதம் 15 முதல் 32% வரையிலும் பதிவாகும். காற்றின் வேகம் மணிக்கு 13 முதல் 17 கி.மீ. வேகத்தில் வீசும் மற்றும் காற்றின் திசையானது வடகிழக்கு திசையிலிருந்து வீசும்.

General Advisory (பொது ஆலோசனை)

Dry weather is expected in this block, in addition, high wind speed with low relative humidity will enhance the evaporation and irrigation requirement. Irrigate the crops based on soil moisture.

அடுத்த ஐந்து நாட்களுக்கு இந்த தொகுதியில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் குறைந்த ஈரப்பதமும், காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் ஆவியாதல் அதிகரிக்கும். அதனால் நீர்ப்பாசனத் தேவை அதிகரிக்க வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சல் வேண்டும்.

Crop Specific Advisory: Coconut - As, mostly coconut is in nut bearing stages
(பயிர் குறிப்பிட்ட ஆலோசனை – தென்னை மரம் – பெரும்பாலான தென்னை மரம் காய் பிடிக்கும் பருவத்தில் இருக்கும்.)

Moisture conservation considering the upcoming drought period

1. To conserve soil moisture use mulching materials like coconut husks, leaves, palms and coir pith.
2. Apply 25 kg of Coir pith in the basin of 1.8 m radius around the palms
3. Bury coconut husk @ 100 Nos. with concave surface facing upwards in circular trenches that are 30 cm wide and 60 cm deep and 1.5 to 2.0 metres in radius around the palm
4. Soaking of coconut husk or coir pith may preserves the monsoon rains and it also overcome drought and button shedding. The beneficial effect of husk burial will last for about 5-7 years.

வரவிருக்கும் வறட்சி காலத்தை கருத்தில் கொண்டு, ஈரப்பதம் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான உத்திகள்

1. மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாப்பதற்கு தென்னை மட்டை, ஓலைகள், நார்கழிவுகள் போன்றவற்றை பயன்படுத்தி மூடாக்கு அமைக்கலாம்.
2. தென்னை மரத்தைச் சுற்றி 1.8 மீட்டர் என்ற சுற்றவளவில் 25 கிலோ தென்னை நார்க்கழிவுகளை இட வேண்டும்.
3. தேங்காய் மட்டையை (100 எண்கள்) மரத்தைச் சுற்றி 1.5 – 2.0 மீட்டர் என்ற சுற்றளவில் 30 செ.மீ. அகலம் மற்றும் 60 செ.மீ. ஆழத்தில் தோண்டி வட்டவடிவ அகழிகளில் மேல்நோக்கி வைக்க வேண்டும்.
4. தேங்காய் மட்டை அல்லது தென்னை நார்கழிவுகளை மூடாக்காக பயன்படுத்தினால் பருவமழை பெய்யும் பொழுது மழைநீர் சேமிக்கப்படுகின்றது. மேலும், இது வறட்சி மற்றும் குரும்பை உதிர்தலை தவிர்க்கவும் உதவுகின்றது. இதனுடைய பயன் சுமார் 5-7 ஆண்டுகள் வரை நீடிக்கும்.

Integrated Pest Management for coconut pests (ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை)

1. Rugose spiralling whitefly

- Forced water spray can be done with a rocker sprayer focussing on the under surface of the coconut leaves which may dislodge the rugose spiralling whitefly population.
- Yellow sticky polythene sheets @ 15 /acre smeared with castor oil or grease can be installed within the palm trunks.
- Rugose spiralling whitefly ecosystem have parasitoid like *Encarsia* sp. and predators namely Green lacewings and ladybird beetles. These natural enemies can be conserved in the orchards.
- *Encarsia* sp. infested whitefly pupae can be collected from old RSW infested trees and tacked to new RSW infested coconut trees.
- 2.5% of maida paste solution mixed with detergent/ Khadi soap @ 5g/ l can sprayed on the leaf surface to check sooty mould growth.

1. தென்னை ருகோஸ் வெள்ளை ஈ ஒருங்கிணைந்த மேலாண் முறைகள்

- தென்னை மட்டைகளின் அடிப்பகுதி ஓலைகளில் படுமாறு வேகமாக தண்ணீரை பீய்ச்சி அடிப்பதன் மூலம் ருகோஸ் வெள்ளை ஈக்களின் பெரும்பகுதி இலைகளிலிருந்து நீக்கப்படும்.
- மஞ்சள் பாலித்தீன் தாள்களில் விளக்கெண்ணெய் அல்லது கிரீஸ் தடவி தென்னை மரங்களுக்கு இடையே ஏக்கருக்கு 15 என்ற வீதத்தில் கட்ட வேண்டும்.
- இயற்கையாகவே தென்னந்தோப்புகளில், என்கார்சியா என்னும் ஒட்டுண்ணிகள் இப்பூச்சிகளை கட்டுக்குள் வைக்கும். இருப்பினும், இந்த ஒட்டுண்ணி குளவிகள் தாக்கப்பட்ட வெள்ளை ஈக்களின் கூட்டுப்புழுக்களை சேகரித்து புதிதாக வெள்ளை ஈக்கள் தாக்கப்பட்ட மரத்தின் ஓலைகளில் கட்டி விட வேண்டும்.
- இயற்கை எதிரிகளான பச்சை கண்ணாடி இறக்கைப் பூச்சி மற்றும் பொறிவண்டுகள் தோட்டத்தில் காணப்படுமாயின் அவற்றை பாதுகாத்து, ஊக்குவிக்க வேண்டும்.
- 2.5 சதவிகித மைதா கரைசலை 5 கி. காதி சோப்புடன் கலந்து செளிப்பதன் மூலம் இலைகளின் மீது படரும் கரும்பூசணத்தை கட்டுப்படுத்தலாம்.

2. Rhinoceros beetle

- Clear away and burn the dead coconut trees found in the orchard.
- Life stages of the rhinoceros beetle noticed in the manure pits can be collected and killed.
- Mechanical removal of adult beetles using Galvanized Iron hooks can be done.
- Rhino lure fixed in plastic buckets @ 12 traps/ha can be installed to check the incidence of rhinoceros beetle
- Green muscardine fungus (*Metarhizium anisopliae*) available in the market can be sprayed in the manure pits to kill their life stages.
- 1 kg castor cake soaked in 5 litres of water in small mud pots can act as a bait to attract and kill the adults.
- 3 to 4 naphthalene balls can be placed at the base of top three coconut leaf sheath once in 45 days will combat the adult entry into the crown region of the seedlings.
- Manure pits and breeding sites can be sprayed with 0.01% carbaryl (50 WP) to kill their life stages.

2. தென்னை காண்டாமிருக வண்டு ஒருங்கிணைந்த மேலாண் முறைகள்

- பாதிப்பிற்குள்ளாகி இறந்த தென்னை மரங்களைத் தோப்புகளிலிருந்து நீக்கி எரித்துவிடல் வேண்டும்.
- உரக்குழிகளில் காணப்படும் காண்டாமிருக வண்டின் முட்டைகள், இளம் புழு, கூட்டுப்புழு பருவங்களை சேகரித்து கொன்று விடவேண்டும்.
- இரும்பு கம்பிகளை கொண்டு தென்னையின் நடுக்குருத்துப்பகுதியில் இருக்கும் காண்டாமிருக வண்டை எடுத்து அழிக்க வேண்டும்.
- ரைனோலூர் (**Rhinolure**) இனக்கவர்ச்சிப் பொறிகளை பிளாஸ்டிக் வாளிகளுள் பொருத்தி ஒரு ஹெக்டருக்கு 12 என்ற வீதம் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- சந்தையில் எளிதில் கிடைக்கக்கூடிய, புழுக்களை தாக்கி அழிக்கும் பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாணத்தை (*மெட்டாரைசியம் அனிசோபிலியே*) எருக்குழிகளில் கலந்து விடவேண்டும்.

- மண்பானைகளில் ஒரு கிலோ ஆமணக்குப் புண்ணாக்கினை 5 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து, தோப்புகளில் வைப்பதன் மூலம் வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- தென்னங்கன்றுகளில் மேலிருந்து முதல் மூன்று மடல்களின் அடிப்பகுதியில் 45 நாட்களுக்கு ஒருமுறை, 3-4 அந்துப் பூச்சி உருண்டைகளை வைப்பதன் மூலம், வண்டுகள் நடுக்குறுத்து பகுதியில் தாக்குவதைத் தடுக்கலாம்.
- உரக்குழிகள் மற்றும் காண்டாமிருக வண்டுகளின் புழுக்கள் இருக்கும் இனப்பெருக்க குழிகளில் 0.01 சதவிகித கார்பரில் (50 WP) பூச்சிக்கொல்லியை தெளித்து அவற்றை அழிக்கலாம்.

3. Eriophyid mite

- Remove mite affected premature fallen nuts from the orchard and burn them to reduce the pest infestation.
- Azadirachtin 10000 ppm + water can be given through root feeding @ the ratio of 1:1
- Talc formulation of entomopathogenic fungi, *Hirsutella thompsonii* @ 20 g/lit of water can be sprayed to combat the mite infestation.
- Spot application of insecticides like triazophos 40 EC @ 5 ml/lit or carbosulfan 25 EC @ 2ml/ can be done.

3. தென்னை ஈரியோ.ஃபைட் சிலந்தி ஒருங்கிணைந்த மேலாண்மை

- முதிர்ச்சிக்கு முன்னர் கீழே விழும் குரும்பைகளை சேகரித்து தோப்பிலிருந்து அப்புறப்படுத்தி எரித்து அழிக்க வேண்டும்.
- அசாடிராக்டின் 10000 பிபிஎம் + தண்ணீர் ஆகியவற்றை 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து வேர் வழி ஊட்டமாக அளிக்க வேண்டும்.
- தூள் வடிவில் விற்கப்படும் ஹிர்சுட்டெல்லா தாம்சோனி என்னும் பூஞ்சாணத்தை லிட்டருக்கு 20 கிராம் வீதம் நீரில் கலந்து தெளிப்பதால் சிலந்திகள் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.
- தென்னை வேரை சுற்றியுள்ள பகுதியில் டிரையஸோஃபாஸ் 40 இசி, 5 மி.லி/லி (அ) கார்போசல்ஃபான் 25 இசி, 2 மி.லி/லி ஆகிய பூச்சிக்கொல்லிகளை இடுவதன் மூலம் சிலந்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

4. Root wilt (or) Kerala wilt and its vectors (bugs and hoppers)

- Provide adequate drainage facilities to reduce anaerobic root decay.
- Root feeding of TNAU coconut tonic @ 40 ml per tree mixed with 160 ml of water at six-month intervals increases immunity against phytoplasma.
- Pour hexaconazole 5 EC (2.0 ml + 300 ml water) in the crown region at 45-day intervals to manage leaf rotting symptoms.
- As temperatures rise in the coming weeks, activity of the lacewing bug vector can be controlled by using a yellow sticky trap at 15/ha and spraying methyl demethan 25 EC 2ml/lit. Also, treat the top two leaf axils with insecticide preparation by mixing phorate 10 grams of with 200-gram sand or powdered neem cake 250 gram. Mix an equal quantity of sand placed around the base of the spindle.

- COCOCON micro-mixture should be applied at 2 litres per tree mixed with 8 litre waters at three-month intervals around the root zone. For mass multiplication, 5 litres 'COCOCON', 10 kg jaggery, 5 litre curd, and 500-gramsodium chloride (common salt) are to be mixed with 150 litres of water and cultured for 5-7 days by covering the container with gunny bags, with constant stirring daily with clean sticks. Then it can be applied in the crown and root zone before irrigation.

4. கேரளா (வேர்) வாடல் மற்றும் அதனை பரப்பும் பூச்சிகளின் ஒருங்கிணைந்த மேலாண்மை

- மண்ணில் காற்றில்லா வேர் சிதைவைக் குறைக்க போதுமான வடிகால் வசதிகளை வழங்குதல்.
- ஆறு மாத இடைவெளியில் தென்னை நுண்ணூட்ட டானிக்கை ஒரு மரத்திற்கு 40 மில்லி என்ற அளவில் 160 மில்லி தண்ணீரில் கலந்து உறிஞ்சும் வேர் மூலம் செலுத்தினால் பைட்டோபிளாஸ்மாவிற்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.
- இலை கறுகும் அறிகுறிகளை கட்டுப்படுத்த 45 நாள் இடைவெளியில் ஹெக்ஸகோனசோல் 5இசி (2.0 மிலி + 300 மிலி தண்ணீர்) என்ற அளவில் குருத்து பகுதியில் ஊற்றவும்.
- வரவிருக்கும் வாரங்களில் வெப்பநிலை அதிகரித்து வருவதால், இந்த நோயை பரப்பும் கண்ணாடி ரெக்கை பூச்சியை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 15 மஞ்சள் ஒட்டும் பொறியைப் பயன்படுத்தியும் அல்லது மெத்தில் டெமெட்டான் 25 இசி 2 மிலி/லிட் தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும் பிற பூச்சிகளை தவிர்க்க, 200 கிராம் மணலுடன் 10 கிராம் ஃபோரேட் மற்றும் 250 கிராம் தூள் செய்யப்பட்ட வேப்பம் பிண்ணாக்கு கலந்து முதல் இரண்டு இலைகளின் அடிப்பகுதியில் சம அளவு மணலைக் கலந்து இடவும்.
- கோகோகன் நுண்ணுயிர் கலவையை ஒரு மரத்திற்கு 2 லிட்டர் என்ற அளவில் 8 லிட்டர் தண்ணீரில் கலந்து மூன்று மாத இடைவெளியில் வேர் மண்டலத்தைச் சுற்றிப் பயன்படுத்த வேண்டும். வயல் வெளி பெருக்கத்திற்கும், 5 லிட்டர் கோகோகான் நுண்ணுயிர் கலவை, 10 கிலோ வெல்லம், 5 லிட்டர் தயிர், 500 கிராம் சோடியம் குளோரைடு (சாதாரண உப்பு) ஆகியவற்றை 150 லிட்டர் தண்ணீரில் கலந்து 5 - 7 நாட்களுக்கு சுத்தமான கோணிப்பையால் மூடி வைத்து வளர்க்க வேண்டும். நன்கு உற்பத்தியாக தினமும், சுத்தமான குச்சிகள் மூலம் கிளறி விடவும். பின்னர் இதனை குருத்து பகுதியில் மற்றும் வேர் மண்டலத்தில் மிதமான ஈரப்பத்தில் இடலாம்.

Livestock Advisory (கால்நடைகளுக்கான ஆலோசனை)

- Livestock animals and poultry birds can be provided with clean drinking water that has been treated with electrolytes as long as the minimum temperature is moderate and the relative humidity is high. Due to the favourable conditions for the growth of mastitis sickness in dairy animals, a 1% KMn04 solution should be used to wash the udder before and after milking, and post-milking teat dips should be used (povidone iodine solution). The California mastitis test (CMT) is also advocated for as a means of diagnosing pre-clinical cases of mastitis. If you have been diagnosed with subclinical mastitis (CMT positive), you can stop it from escalating to mastitis by giving your cows a daily dose of trisodium citrate, 30 milligrams, mixed in 250mL of drinking water.
- It is advised to practice deworming and vaccination adequately.
- Dry feed and greens should be supplied without any added moisture to prevent aflatoxin poisoning.

- குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் காரணமாக, கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு எலக்ட்ரோலைட்டுகளுடன் கூடிய தெளிவான குடிநீரை வழங்கவும். கறவை மாடுகளில் மடிவீக்கம் நோய் ஏற்படுவதற்கு ஏற்ற காலநிலை நிலவுவதால், பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் 1% $KMn0_4$ கரைசலைக் கொண்டு கறவை மாடுகளைக் கழுவு வேண்டும். கலிபோர்னியா மடிநோயை கண்டறிய கலிபோர்னியா மடிநோய் என்ற சோதனையை (சிஎம்டி) செய்யலாம். மடிநோய்களுக்கான அறிகுறிகள் இருந்தால் ட்ரைசோடியம் சிட்ரேட் 30 மி.கி. என்ற அளவில் 250 மி.லி. குடிநீரில் கலந்து தினமும் இரண்டு முறை வாய்வழியாக கொடுக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.
- குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி போடுவதை அதிக அளவில் கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறது.
- உலர் மற்றும் அடர் தீவனங்களில் ஈரப்பதத்தினை குறைப்பதன் மூலம் அஃப்லாடாக்சின் என்னும் பூஞ்சையின் பாதிப்பினை குறைக்கலாம்.